# தேவனின் பரிசுத்த ஆவியின் பலத்தால் இயேசுவுக்கு சாட்சியாய் இருத்தல்

**சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் P5b யை வாசிக்கவும்**


ஜெபம்: “அன்பான கர்த்தாவே, பேதுருவும் பிற அப்போஸ்தலர்களும் செய்தது போல, என் மந்தையில் இருக்கும் விசுவாசிகள், நீர் கொடுக்கும் வல்லமையை உபயோகித்து தங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் சாட்சியாய் இருக்க உதவுவீராக.”

## 1. உங்கள் இருதயத்தை ஜெபத்தாலும் தேவ வார்த்தையாலும் ஆயத்தம் செய்க

இரட்சிப்பைப் பற்றிய நற்செய்தியை பலருக்கு உறுதிப்படுத்த பேதுருவும் யோவானும் சொல்லிய, செய்த பல விஷயங்களை அப். 3:1-22 ல் காண்க (பதில் கேள்விகளுக்குப் பின் வருகிறது).

- தங்கத்தை விட விலை உயர்ந்த எதை பேதுரு முடவனுக்கு அளித்தான்? *(வச. 6)*
- விசுவாசித்த முடவனை குணமாக்கிய வல்லமையின் ஆதாரம் எது? *(12-13, 16).*
- எந்த மிக முக்கியமான சத்தியத்தைக் குறித்துப் பேதுருவும், யோவானும் சாட்சி அளித்தனர்? *(14-15).*
- தங்கள் பாவம் கழுவப்பட மக்கள் என்ன செய்ய வேண்டும்? *(19).*

**வல்லமையோடு சாட்சியளிக்க ஏழு உதவிகள்**




1. **கண்கள்.** நாம் என்ன பார்க்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை யோவான் 4:35-39 ல் காண்க.
2. **உதடுகள்.** இயேசுவைப் பற்றி நாம் கூற வேண்டியவற்றை லூக். 24:46-48 ல் காண்க.
3. **கரங்கள்.** (வேதாகமம்) தேவ வார்த்தையைக் கொண்டு நாம் என்ன செய்ய வேண்டும் என்பதை 2 தீமோ. 2:2 ல் காண்க.

   **சீஷர்கள்** என்ன செய்ய வேண்டும் என்று போதிக்க வேண்டியதை மத். 28:18-20 ல் காண்க.
4. **இருதயம்.** நம்முடைய வேலைகளை பயனுள்ளது ஆக்குவது என்ன என்பதை 1 கொரி. 13:1-3ல் காண்க.

   தேவன் செயலாற்ற நமக்கு தேவையாய் இருப்பது என்ன என்பதை எபி. 11:6 ல் காண்க.

   எப்போதும் நாம் செய்ய வேண்டியது என்ன என்பதை 1 தெச. 5:17 ல் காண்க.

   யாரிடம் இருந்து வல்லமையை ஏன் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதை அப். 1:8 ல் காண்க.

5. **கை.** (சாவிகள்) இயேசு பேதுருவுக்கு என்ன வாக்குத்தத்தம் செய்தார் என்பதை மத். 16:13-19 ல் காண்க.

   இந்த வாக்குறுதியை வேறு யார் பெற்றார்கள் என்பதை மத். 18:18 ல் காண்க.

   நம் மூலம் தேவன் செய்வது என்ன என்பதை யோவான் 20:22-23 ல் காண்க.

6. **கால்கள்.** (காலணிகள்) தேவன் நமக்கு அளிக்கும் காலணிகள் எத்தகையவை? (எபே. 6:15)

   பாதங்கள் 'அழகானவை' என்று கவித்துவமாகக் கூறப்படுகிறது என்பதை ஏசா. 52:7 ல் காண்க

7. **உதவியாளர்.** பேதுருவுக்கு எத்தனை உதவியாளர்கள் என்பதை அப். 11:12 ல் காண்க.

   பவுலுக்கு எத்தனை உதவியாளர்கள் இருந்தார்கள் என்பதை அப். 13:2-5ல் காண்க

   எத்தனை பேர் சேர்ந்து பயணம் செய்தனர் என்பதை லூக். 10:1 ல் காண்க

## பதில்கள்

1. **கண்கள்:** அறுவடைக்கு ஏற்றதாக இருக்கும் நிலத்தில் கவனம் செலுத்துக. அதாவது மனம்திரும்பி விசுவாசிக்க தயாரான மக்கள்.

2. **உதடுகள்:** இயேசுவின் மரணம், ஜீவன் அளிக்கம் உயிர்த்தெழுதல், மனந்திரும்பும் யாவருக்கும் மன்னிப்பு ஆகியவற்றை அறிவிக்க வேண்டும்.

3. **கரங்கள்** (வேதாகமம்): நாம் கேள்விப்படுவதை மற்றவர்களுக்கு கூறி, இயேசுவுக்குக் கீழ்ப்படிய விசுவாசிகளுக்கு போதித்தல்.

4. **இருதயம்:** எல்லாவற்றையும் அன்பு, விசுவாசம், ஜெபம், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையோடு செய்யவும்.

5. **கைகள்** (சாவிகள்): இயேசு நமது இராஜ்யத்தின் திறவு கோல்களைத் தருவதாகப் பேதுருவுக்கு வாக்குறுதி அளித்தார்.

பாவத்தை மன்னிக்கும் வல்லமைக்கு அது ஓர் அடையாளம். இயேசு தமது பிற சீஷர்களுக்கும் இதே வல்லமையை அளித்தார். பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட விசுவாசிகளுக்கும் பாவத்தை மன்னிக்கும் இந்த அதிகாரத்தை வாக்களித்தார்.

இயேசு, சொஸ்தமாக்குவதற்காக ஒரு திமிர்வாதக் காரனின் நான்கு நண்பர்கள் அவனைக் கூரையைப் பிரித்து இறக்கிய போது அவர்களது விசுவாசத்தைக் கண்டு அவனை அவனது பாவத்திலிருந்து விடுவிக்க இயேசு தாமே இந்தத் "திறவுகோல்களை" உபயோகித்தார் (மாற்கு 2:1-12). அவர்களுடைய விசுவாசத்தின் காரணமாக இயேசு அவனது பாவங்களை மன்னித்தார்.

ஒருவர் இயேசு கிறிஸ்துவையும் அவருடைய மன்னிப்பையும் ஏற்றுக் கொள்வார் என்று பரிசுத்த ஆவியின் வல்லமையால் விசுவாசித்தால் நாமும் இந்த 'திறவுகோல்களை' உபயோகிக்க முடியும். ஒரு விசுவாசி வல்லமையோடு இயேசுவுக்கு சாட்சியாக நிற்கும்போது மற்றவருடைய மனமாறுதல் தொடங்குகிறது. அதன்பின், நிச்சயமாக, அந்த நபரும் தமது நம்பிக்கையை ஆழப்படுத்தும் போதே மனமாற்றம் பூரணமாகிறது.

6. **பாதங்கள் :** நமது பாதங்கள் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்ற பாதரட்சையை அணிய வேண்டும். அதற்கு அர்த்தம் என்னவென்றால் மக்களுக்கு நாம் சமாதானமும் சந்தோஷமும் நிறைந்த மகிழ்ச்சியான செய்தியைக் கொண்டு வருகிறோம் என்பதே.

7. **உதவியாளர்கள்:**

   a) புறஜாதி மக்களுக்கு இயேசுவைப் பற்றி கூற **பேதுரு** சென்ற போது அவருக்கு ஆறு உதவியாளர்கள் இருந்தனர்.

   b) **பவுலும், பர்னபாவும்,** தங்களுடைய உதவியாளரான யோவானுடன்(மாற்கு) அந்தியோகியாவில் இருந்த பிற தேசங்களுக்கு அனுப்பப்பட்டனர்.

   c) **இயேசு** 70 பேரை இரண்டிரண்டு பேராக அனுப்பி வைத்தார். இயேசுவும் அவர்களுடைய அப்போஸ்தலர்களும் பொதுவாக, தனியாய் இல்லாமல், ஒரு குழுவாகவே செயல்பட்டனர்.




பரிசுத்த ஆவியால் நிரப்புதல்

வேதாகமத்தில் எங்கெல்லாம் பரிசுத்த ஆவியால் நிரம்புதல் அல்லது அவரது வல்லமையைப் பெற்றுக் கொள்ளுதல் என்ற குறிப்புகள் வருகின்றனவோ அங்கெல்லாம் விசுவாசிகள் தேவனுக்காகக் காரியங்களை ஆற்றுவதே அதன் நோக்கம் என்பதைக் காண்கிறோம். உதாரணமாக, சிம்சோனின் மேல் பரிசுத்த ஆவி வந்த போது அவன் சிங்கத்தைக் கொன்றான். அதைத் தொடர்ந்து வந்த நிகழ்ச்சிகள் மூலம் இஸ்ரவேலர் தங்கள் எதிரிகளிடம் இருந்து விடுபட்டனர். பரிசுத்த ஆவியால் நிரப்புவதன் நோக்கம் மக்களுக்கு ஓர் உணர்ச்சிகரமான அனுபவத்தை தருவதற்கு அல்ல. வேதாகமத்தில் ஆராதித்தவர்கள் துள்ளிக் குதித்து சத்தமிட்ட சம்பவம் ஒரு இடத்தில் தான் வருகிறது. அது எலியாவைக் கொண்டு தேவன் அவர்களை சங்கரித்தபோது தான் (1 இராஜா. 18:25-40).

## 2. இந்த வாரத்து நடவடிக்கைகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக

- இயேசு கூறியது போல, வல்லமையோடு சாட்சியளிப்பதற்காக ஜெபிக்கவும். பின் இயேசுவைப் பற்றிய அறியாத மக்களிடம் செல்லவும்.
- இயேசு இல்லாமல் வழிவிலகிப்போன மக்களுக்காக ஜெபிக்கவும்
- விசுவாசிகளை சந்தித்து அவர்களுடைய நண்பர்கள் உறவினர்கள் யாரென்றும், யாருக்கு அவர்கள் யேசுவைப் பற்றி கூற வேண்டும் என்றும் கேட்கவும். அவர்கள் இதற்கு உதவி வேண்டும் என்று விரும்பினால் அவர்களோடு சென்று இப்பணியை ஆரம்பிக்க உதவுங்கள்.

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்

பேதுருவும் யோவானும் ஒரு மனிதனை குணப்படுத்தி பலருக்கு இயேசுவைப் பற்றி கூறினார்கள் என்பதை **விளக்கவும்.** கேள்விகளைக் கேட்கவும் (மேலே தரப்பட்டுள்ளது).

வல்லமையோடு சாட்சியளிக்க தேவைப்படும் ஏழு உதவிகளை **விளக்குக** (மேலே).

இந்த வல்லமையின் நோக்கம் பற்றி **விளக்கவும்.**

**குழந்தைகள்** தாங்கள் தயாரித்ததை வழங்கட்டும்.

யோவான் 21:9-14 ஐ வாசித்து **கர்த்தரின் பந்தியை** வழங்கவும். இயேசு தம்மோடும் பிறரோடும் விருந்துண்ண அழைக்கிறார் என்பதை விளக்கவும்.

வல்லமையோடு இயேசுவுக்காக சமீபத்தில் **சாட்சி** அளித்ததை விசுவாசிகள் அறிவிக்கட்டும்.

ஒருவருக்காக ஒருவர் ஜெபிக்கவும், திட்டமிடவும், ஒருவரை ஒருவர் தைரியப்படுத்தவும் இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுக்களாக** அமரவும்.

**மனனம்:** அப். 4:33.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net